விவரக் கையேடு மற்றும் விண்ணப்பப் படிவம்

2009-10

ஸ்தோலைவிலைக் கல்வி இயக்ககம்

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் 613 010 தமிழ்நாடு

website: www.tamiluniversity.ac.in

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் 613 010

- தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்குத் தேசியத் தரமதிப்பீட்டுக் குழுமம் (NAAC) B^{++} தரம் வழங்கி பெருமைப் படுத்தியுள்ளது.

- தமிழ்ப் பல்கலைக்கழகம் ஓர் உயர்நிலை ஆய்வு மையமாக 1981ஆம் ஆண்டு செப்தம்பர்த் திங்கள் 15ஆம் நாள் தொடங்கப்பெற்றது. இது தஞ்சை -திருச்சி நெடுஞ்சாலையில் தஞ்சாவூர் புதிய பேருந்து நிலையத்திலிருந்து 3 கி.மீ. தொலைவில் பரந்து விரிந்த ஏறத்தாழ 900 ஏக்கர் நிலப்பரப்பில் எழில்மிகு இயற்கைச் சூழலில் அமைந்துள்ள ஓர் உயர்கல்வி நிறுவனமாகும்.

- தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் 5 புலங்களின்கீழ் 25 துறைகள் செயல்படுகின்றன. முனைவர் (Ph.D) ஆய்வியல் நிறைஞர் (M.Phil) பட்டப்படிப்புகள் அனைத்துத் துறைகளிலும் உள்ளன. துறையில் ஆய்வு மேற்கொள்ளப்படவும் வாய்ப்புகள் உள்ளன.

- உயர்நிலை ஆய்வுக்கு உறுதுணையாக நாடாளுமன்ற வடிவமைப்பில் ஒரு நூலகம் அமைந்துள்ளது. இதில் 1,34,466 நூல்களும், 334 பருவ இதழ்களும் ஆய்வு மாணவர்களின் பயன்பாட்டிற்காக இடம் பெற்றுள்ளன. ஆய்வு மாணவர்கள் பயன்பெறவும் பயிற்சி பெறவும் கணிப்பொறி அறிவியல் துறை வழிவகை செய்கிறது. இத்துறையில், மாணவர்கள் பயன் படுத்தும் வகையில் இணையதள வசதியும் உள்ளது.

- முதுநிலை மாணவர்கள் நாட்டு நலப்பணித் திட்டத்தில் சேர்ந்து பணியாற்றும் வாய்ப்பும் உள்ளது.

- 2006-07ஆம் ஆண்டு தமிழ்ப் பல்கலைக் கழகத்தின் வெள்ளிவிழா நிகழ்வினையொட்டி இரண்டு புதிய துறைகள் தொடங்கப்பட்டன. தெரிவு அடிப்படை மதிப்பெண் முறை (CBCS) செயல்படுத்தப்பட்டுச் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

- 2009-10ஆம் கல்வியாண்டில் தமிழக மரபுசார் நாட்டார் நிகழ்த்துகலைகளில் பயிற்சியும் கல்வியும் உறைவிடக் கல்வி முறையாக அளிக்கக்கூடிய வகையில் இளங்கலை (B.A.,), சான்றிதழ் (Certificate) வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன.

- மாணவர்களுக்கென, வேலை வாய்ப்புக்கு வழிகாட்டும் மையம் செயல்படுகிறது. மாணவர்கள் குறைதீர்க்கும் அமைப்பும், முன்னாள் மாணவர்கள் அமைப்பும் மாணவர்கள் நலன் கருதிச் செயல்பட்டு வருகின்றன.

- மாணவ, மாணவியர்களுக்குத் தனித்தனியாக விடுதி வசதிகள் உள்ளன.

- தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் முதுநிலை பட்டப் படிப்பிற்கான பாடத்திட்டங்கள், தொடர்புடைய துறைகளில் மாணவர்கள் உயர் ஆய்வினைத் தொடரும் வகையிலும், வேலை வாய்ப்பிற்குரிய தகுதித் தேர்வுகளில் தேர்ச்சி அடையும் வகையிலும் திட்டமிடப்பட்டுத் தயாரிக்கப்பட்டுள்ளன. பட்டயம், சான்றிதழ் வகுப்புகள் மாணவர்கள் பகுதி நேரமாகப் பயிலும் வகையிலும், எதிர்கால வேலைவாய்ப்புப் பயன்பாட்டைக் கருத்திற் கொண்டும் வடிவமைக்கப்பட்டுள்ளன. கற்றலில் ஈடுபாடு, கருத்தரங்குகள், பணிப்பட்டறைகளில் பங்கேற்றல், களப்பணிக்குச் செல்லுதல், ஆய்வுக் கட்டுரை அளித்தல் ஆகியன பாடத்திட்டத்தின் பகுதிகளாகக் கருதப்பெற்று அகமதிப்பீட்டு மதிப்பெண்கள் வழங்கப் பெறுகின்றன. பட்டப்படிப்புடன் கூடுதலாகச் சான்றிதழ் மற்றும் பட்டயம் பெறும் கல்விக்கும் வாய்ப்புள்ளது.

முழு நேரம் மற்றும் பகுதி நேர முனைவர் பட்ட (பிஎச்.டி) / ஆய்வியல் நிறைஞர் (எம்.ஃபில்) பட்டப்படிப்பு உள்ள துறைகள்

1. சிற்பத்துறை
2. இசைத்துறை
3. நாடகத் துறை
4. ஓலைச்சுவடித்துறை
5. அரிய கையெழுத்துச் சுவடித் துறை
6. கல்வெட்டியல் மற்றும் தொல்லியல் துறை
7. நீரகழாய்வு மையம்
8. அயல்நாட்டுத் தமிழ்க் கல்வித்துறை
9. மொழிபெயர்ப்புத்துறை
10. அகராதியியல் துறை
11. சமூக அறிவியல் துறை
12. அறிவியல் தமிழ் மற்றும் தமிழ் வளர்ச்சித் துறை
13. கல்வியியல் மற்றும் மேலாண்மையியல் துறை
14. இலக்கியத்துறை
15. மொழியியல் துறை
16. தத்துவ மையம்
17. பழங்குடி மக்கள் ஆய்வு மையம்
18. நாட்டுப்புறவியல் துறை
19. இந்திய மொழிகள் பள்ளி
20. சித்த மருத்துவத்துறை
21. தொல்லறிவியல் துறை
22. தொழில் மற்றும் நில அறிவியல் துறை
23. கட்டடக்கலைத்துறை
24. கணிப்பொறி அறிவியல் துறை
25. சுற்றுச்சூழல் மற்றும் மூலிகை அறிவியல் துறை
26. நூலகம்

விவரச் சேயேடு 2009-10

தமிழ்ப் பல்கலைக்கழகம்

(தேசியத் தர மதிப்பீட்டுக் குழுமத்தின் B++ தரம் பெற்றது)

- முதுநிலை
- இளநிலை
- தொழில்முறைப் பட்டம்
- முதுநிலைப் பட்டயம்
- பட்டயம்
- சான்றிதழ்

அனைத்துப் பாடங்களும் தமிழ்வழியில் மட்டுமே நடத்தப்படும்

தொலைநிலைக் கல்வி இயக்ககம்

(புதுதில்லி தொலைநிலைக் கல்விக் குழும (DEC) அங்கீகாரம் பெற்றது)

வாகை வளாகம், திருச்சி சாலை, தஞ்சாவூர்-613 010

தொலைபேசி:

விண்ணப்பங்கள், பாட நூல்கள் தொடர்பான விவரங்களுக்கு - தொலைநிலைக்கல்வி இயக்ககம் - 04362-227152

தேர்வு தொடர்பான அனைத்து விவரங்களுக்கு - தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலகம் - 04362-227845

தொலைநகலி: 04362-226159

இணையதளம்: www.tamiluniversity.ac.in

தமிழ்ப் பல்கலைக்கழகம்

தஞ்சாவூர் 613 010

தொலைநிலைக்கல்வி இயக்ககம்

முனைவர் **ம. இராசேந்திரன்**

துணைவேந்தர்

முனைவர் **ஆ. கார்த்திகேயன்**

பதிவாளர் (பொ)

முனைவர் **ஆ. இராமநாதன்**

இயக்குநர் (பொ)

முனைவர் **ம. ஜெகதீசன்**

தேர்வுக் கட்டுப்பாட்டாளர் (பொ)

தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர் 613 010
தொலைநிலைக்கல்வி இயக்ககம்

தமிழ்ப் பல்கலைக்கழகத்தின் வெள்ளிவிழா ஆண்டின் சிறப்பியல்பாகத் தொலைநிலைக்கல்வி இயக்ககம் ஆகஸ்ட் 2006ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. இவ்வியக்ககத்தின்கீழ் பல்வேறு பாடப்பிரிவுகள் தொலைநிலைக்கல்வி வாயிலாக 2006-07 ஆம் ஆண்டு தொடங்கப்பெற்று சிறப்பாக நடைபெற்று வருகின்றன.

உயர்தரக் கல்வியை உலகிற்குப் பகிர்ந்து அளித்தல், தமிழ் மரபு சார்ந்த கலை, அறிவியல் தொழில்நுட்பங்களைத் தலைமுறைகள் பயன்கொள்ள வழிவகை செய்தல், வாய்ப்பு வளம் அமையப் பெறாத சமுதாயத்தினை நோக்கிச் சென்று கல்வி கற்கும் வாய்ப்பினை அமைத்துத் தருதல், மண் வளம், மரபு வளம், கல்வி, செயல்முறை அறிவுகளால் காக்கப் படுவதற்கு வழி காணுதல், தமிழர்தம் மரபுவழி சார்ந்த அறிவியல், தொழில்நுட்ப, மொழி, இலக்கண, வரலாறு போன்ற நிலைப்பாடுகளின் செவ்வியல் பண்புகளை உலகறியச் செய்தல், தமிழால் முடியும், தமிழனால் முடியும், தமிழ்ப் பல்கலைக்கழகத்தால் எவ்வகை அறிவுத்துறையிலும் விளக்கம் பெற முடியும் என நிறுவுதல் போன்றவை தொலைநிலைக்கல்வி இயக்ககத்தின் முதன்மைக் குறிக்கோள்களாக அமைந்துள்ளன.

2008ஆம் ஆண்டில் தமிழ்ப் பல்கலைக் கழகத் தொலைநிலைக்கல்வி இயக்ககத்தின் கல்வி மற்றும் தகவல் மையங்களாக மாவட்டம், மாநகராட்சி, வட்டம் ஆகிய அனைத்து நிலைகளிலும் மொத்தம் 110 மையங்கள் செயல்பட்டு வருகின்றன, மேலும் பல கல்வி விரிவாக்க மையங்களைத் தொடங்கி நடத்துவதற்கான முயற்சிகளிலும் இவ்வியக்ககம் தொடர் நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்கக வாயிலாக நடத்தப்பெறும் அனைத்துப் பாடப்பிரிவுகளுக்கும் புதுதில்லியிலுள்ள தொலை நிலைக் கல்விக்குழுமத்திடம் (DEC) உரிய அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.

கல்லூரி, பல்கலைக்கழகங்களில் பயிலும் மாணவர்கள் தொலைநிலைக்கல்வி இயக்ககம் மூலம் ஒரே நேரத்தில் இன்னொரு பட்டம் (Degree), பட்டயம் (Diploma)., சான்றிதழ் (Certificate) வகுப்புகளில் படிக்கும் வாய்ப்பு உள்ளது.

தொலைநிலைக்கல்வி இயக்கக வழி பயில விரும்பும் மாணவர்கள், தொலைநிலைக்கல்வி இயக்கக கல்வி மற்றும் தகவல் மையங்களில் அல்லது தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி இயக்ககத்தில் (நேரில்/அஞ்சல்வழி) உரிய தொகையைச் செலுத்தி விண்ணப்பப் படிவத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், தமிழ்ப் பல்கலைக்கழக இணையதள முகவரியான ***www.tamiluniversity.ac.in*** வழியாகவும் விண்ணப்பங்களைப் (இளங்கல்வியியல் (பி.எட்) பாடம் நீங்கலாக) பெற்று, சேர்க்கை பெற உரிய விண்ணப்பப்படிவத் தொகையை வரைவோலையாக எடுத்து இணைத்து அனுப்பலாம்.

தொலைநிலைக்கல்வி இயக்ககவழி நடத்தப்பெறும் பாடப்பிரிவுகள்

முதுநிலை	தமிழ், வரலாறு, வணிகவியல், புவியியல், யோகாவும் மனித மாண்பும்
இளநிலை	தமிழ், வரலாறு, வணிகவியல், தமிழ் இலக்கியம், தமிழிசை, இளங்கல்வியியல் (பி.எட்)
தொழில்முறைப் படிப்புகள்	எம்.பி.ஏ, பி.பி.ஏ, பி.சி.ஏ.
பட்டயம்	இசை ஆசிரியர் பயிற்சி, யோகா ஆசிரியர் பயிற்சி, பரதநாட்டிய ஆசிரியர் பயிற்சி, பரதநாட்டியம், சைவ சித்தாந்தம், கணிப்பொறி பயன்பாட்டியல், பயன்பாட்டு ஆங்கிலம், மூலிகை அறிவியல், பிழையில்லாத் தமிழ்ப் பயிற்சி, மருத்துவ மூலிகை அழகுக் கலை, மணியியல், தொழிலாளர் நலச்சட்டம்
சான்றிதழ்	இசை, பரதநாட்டியம், நூலகம் மற்றும் தகவலறிவியல், தமிழ்ப் புலவர் பயிற்சி, அருங்காட்சியகவியல், கோயிற் கட்டடக்கலை வரைவியல், நுகர்வோர் கல்வி, மனித உரிமைக் கல்வி, தாள நுட்பவியல், மொழிபெயர்ப்பியல்
முதுநிலைப் பட்டயம்	பி.ஜி.டி.சி.ஏ
இரண்டாமாண்டு நேரடிச் சேர்க்கை (Lateral entry)	பி.சி.ஏ

விண்ணப்பக் கட்டணம் (Cost of Application)

எம்.பி.ஏ ரூ.**300**/-
பிற பாடங்களுக்கு ரூ.**100**/-

அஞ்சல் வழியில் விண்ணப்பத்தினைப் பெற விரும்புவோர் எம்.பி.ஏ.பாடப்பிரிவிற்கு ரூ.**325**/-ஐ யும், பிற பாடப்பிரிவுகளுக்கு- ரூ.**125**/-ஐயும்

The Director,
DDE,
Tamil University,
Thanjavur-10

என்ற பெயரில் தஞ்சையில் மாற்றத்தக்க வகையில் வரைவோலையாக எடுத்து அனுப்பிப் பெற்றுக் கொள்ளலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி:

இயக்குநர்,
தொலைநிலைக்கல்வி இயக்ககம்,
தமிழ்ப் பல்கலைக்கழகம்,
தஞ்சாவூர் 613 010

நேரில் விண்ணப்பம் பெற விரும்புவோர் மேற்கண்ட விண்ணப்பத் தொகையினைத் தமிழ்ப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில் செலுத்திப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், இப்பல்கலைக்கழகம் அங்கீகரித்துள்ள தமிழகத்திலுள்ள அனைத்துக் கல்வி மற்றும் தகவல் மையங்களிலும் (காண்க பக். 21- 27) மேற்கண்ட தொகையினைச் செலுத்தி விண்ணப்பத்தைப் பெற்றுக் கொள்ளலாம்.

மேலும், விண்ணப்பங்களைத் தமிழ்ப் பல்கலைக்கழக இணைய தள முகவரியிலிருந்தும் பெறலாம். இணைய தள முகவரி:

www.tamiluniversity.ac.in

அவ்வாறு பெறப்பட்ட விண்ணப்பங்களுக்குரிய கட்டணத்தை வரைவோலையாக எடுத்து இணைத்து அனுப்புதல் வேண்டும்.

விற்கப்பட்ட விண்ணப்பங்கள் திரும்பப் பெற்றுக் கொள்ளப்படமாட்டா.

மாணவர்களின் கவனத்திற்கு

- **மாணவர்கள் தங்கள் கல்விக் கட்டணங்களை இந்தியன் வங்கி செலுத்துச் சீட்டின் வாயிலாகவே செலுத்த வேண்டும். இந்தியன் வங்கியின் எந்தக் கிளையிலும் பணம் செலுத்தலாம்.**
- **மொத்தக் கல்விக் கட்டணத்தில் 60 விழுக்காட்டுத் தொகையைப் பல்கலைக்கழகத்திற்கு இந்தியன் வங்கியின் செலுத்துச்சீட்டின் வாயிலாகச் செலுத்தவும். எஞ்சிய 40 விழுக்காட்டுத் தொகையைத் தகவல் மைய ஒருங்கிணைப்பாளரிடம் அளித்து விடலாம்.**
- **அஞ்சல் வழி அல்லது பல்கலைக்கழகத் தொலைநிலைக்கல்வி இயக்ககத்தில் நேரடி சேர்க்கை பெறுவோர் முழுக் கல்விக் கட்டணத்தையும் இந்தியன் வங்கியின் செலுத்துச் சீட்டின் வாயிலாகவே செலுத்த வேண்டும்.**
- **பிற அனைத்துக் கட்டணங்களையும் வங்கி வரைவோலையாக அனுப்ப வேண்டும்.**

பாடப்பிரிவுகளும் கல்வித் தகுதிகளும்

தொலைநிலைக்கல்வியில் பயில விரும்பும் மாணவர்கள் 11+1 / 10+2 / 10+3 (10+பட்டயம்) ஆகியவற்றில் ஏதாவது ஒரு முறையில் பயின்றவராக இருத்தல் வேண்டும்.

இளநிலைப் பட்டம்

எண்	பாடம்	சேர்க்கைத் தகுதி	காலம்
1.	பி.ஏ (தமிழ்)	மேல்நிலைப்பள்ளி (+2) தேர்ச்சி **அல்லது** 10+தொழில்நுட்பப் பட்டயம்	மூன்று ஆண்டுகள்
2.	பி.ஏ (வரலாறு)		
3.	பி.ஏ (தமிழிசை)		
4.	பி.லிட் (தமிழ் இலக்கியம்)		
5.	பி.காம் (வணிகவியல்)		
6.	பி.பி.ஏ		
7.	பி.சி.ஏ		
8.	பி.எஸ்சி (புவியியல்)*	மேல்நிலைப்பள்ளி (+2) தேர்ச்சி	

முதுநிலைப் பட்டம்

1.	எம்.ஏ (தமிழ்)	ஏதேனும் ஒரு இளநிலைப் பட்டம்	ஈராண்டுகள்
2.	எம்.ஏ (வரலாறு)		
3.	எம்.ஏ (யோகாவும் மனித மாண்பும்) (தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்க்கும் ஆழியாறு உலக சமுதாய சேவா சங்கத்துக்குமிடையே ஏற்படுத்தப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் அடிப்படையில் இப்பாட வகுப்பு நடத்தப்படுகிறது)		
4.	எம்.ஏ (தமிழிசை)	இசையில் இளநிலைப்பட்டம் தேர்ச்சி **அல்லது** ஏதேனும் ஒரு இளநிலைப் பட்டத்துடன் கீழ்க்காணும் ஏதேனும் ஒன்றில் தேர்ச்சிப் பெற்றிருத்தல் வேண்டும் அ) தமிழக அரசின் சங்கீத வித்வான் அல்லது இசைக்கலைமணி தேர்வு ஆ) தமிழக அரசு தேர்வு இயக்ககத்தின் மேனிலைத் தேர்வு இ) பாரதிதாசன் பல்கலைக்கழகத்தின் ஏழிசை மணி தேர்வு ஈ) தமிழ்நாடு மாவட்ட அரசு இசைப்பள்ளித் தேர்வு	
5.	எம்.காம் (வணிகவியல்)	பி.காம் தேர்ச்சி	
6.	எம்.பி.ஏ	ஏதேனும் ஒரு இளநிலைப் பட்டம்	
7.	எம்.எஸ்சி (புவியியல்)*		

1.	பி.சி.ஏ*	கணிப்பொறித் தொழில்நுட்பவியல் (Computer technology) அல்லது கணிப்பொறியியல் (Computer Engineering) அல்லது தகவல் தொழில்நுட்பவியல் (Information Technology) ஆகிய ஏதாவது ஒன்றில் தொழில் நுட்பக் கல்விப் பட்டயம்	ஈராண்டுகள்

முதுகலைப் பட்டயம்

21.	பி.ஜி.டி.சி.ஏ*	ஏதேனும் ஒரு இளநிலைப் பட்டம்	ஓராண்டு

பட்டயம்

1.	இசை ஆசிரியர் பயிற்சி* (Music Teacher Training)	மேல்நிலைப்பள்ளி (+2) தேர்ச்சி **அல்லது** 10ஆம் வகுப்புத் தேர்ச்சியுடன் இசையில் சான்றிதழ்த் தேர்ச்சி/ தமிழக அரசு இசைப்பள்ளிச் சான்றிதழ்	ஓராண்டு
2.	பரதநாட்டிய ஆசிரியர் பயிற்சி* (Bharathanatya Teacher Training)	மேல்நிலைப்பள்ளி (+2) தேர்ச்சி **அல்லது** 10ஆம் வகுப்புத் தேர்ச்சியுடன் பரதநாட்டியத்தில் சான்றிதழ்த் தேர்ச்சி	
3.	பரதநாட்டியம்	10ஆம் வகுப்புத் தேர்ச்சி	
4.	யோகா ஆசிரியர் பயிற்சி* (Yoga Teacher Training)	மேல்நிலைப்பள்ளி (+2) தேர்ச்சி **அல்லது** 10ஆம் வகுப்புத் தேர்ச்சியுடன் யோகா சான்றிதழ்த் தேர்ச்சி	
5.	சைவ சித்தாந்தம்		
6.	மூலிகை அறிவியல்*	10ஆம் வகுப்புத் தேர்ச்சி	
7.	மருத்துவ மூலிகை அழகுக்கலை*		
8.	மணியியல்*		
9.	கணிப்பொறிப் பயன்பாட்டியல்*		
10.	தொழிலாளர் நலச் சட்டம்		

சான்றிதழ்

1.	தமிழ்ப் புலவர் பயிற்சி* (Tamil Pandit Training)*	தமிழ் இலக்கியத்தில் புலவர் பட்டம் அல்லது பி.லிட் பட்டம் பெற்றிருக்க வேண்டும். இப்பாடப்பிரிவின் காலத்தில் 15 நாட்கள் கட்டாயத் தொடர்பு வகுப்பில் (compulsory contact class) பங்குபெறுதல் வேண்டும்.	6 மாதங்கள்
2.	இசை*	10ஆம் வகுப்புத் தேர்ச்சி	
3.	பரதநாட்டியம்*		
4.	தாள நுட்பவியல்*		
5.	நூலக மற்றும் தகவல் அறிவியல்*		
6.	நுகர்வோர் கல்வி		
7.	மனித உரிமைக் கல்வி		
8.	அருங்காட்சியகவியல்		

* இப்பாடப் பிரிவினருக்குக் கட்டாயப் பயிற்சி வகுப்புகள் உண்டு.

பாட த்திட்டங்கள்

இளநிலைத் தமிழ் (பி.ஏ)

முதலாமாண்டு		
1.	பகுதி -1	தமிழ்-1
2.	பகுதி-2	ஆங்கிலம் -1
3.	பகுதி-3	தாள்-1 தமிழ் இலக்கிய வரலாறு
4.		தாள்-2 நன்னூல்-எழுத்ததிகாரம்
5.		தாள்-3 இக்கால இலக்கியம்

இரண்டாமாண்டு		
6.	பகுதி - 1	தமிழ்-2
7.	பகுதி-2	ஆங்கிலம் -2
8.	பகுதி-3	தாள்-4 தமிழக வரலாறும் பண்பாடும்
9.		தாள்-5 நன்னூல்-சொல்லதிகாரம்
10.		தாள்-6 சிற்றிலக்கியம், நீதி இலக்கியம்

மூன்றாமாண்டு		
11.	தாள்-7	நம்பியகப்பொருள், புறப்பொருள் வெண்பாமாலை
12.	தாள்-8	யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம்
13.	தாள்-9	காப்பிய, சமய இலக்கியங்கள்
14.	தாள்-10	சங்க இலக்கியம்
15.	தாள்-11	இலக்கியத் திறனாய்வும் ஒப்பிலக்கியமும்

இளநிலை வரலாறு (பி.ஏ)

முதலாமாண்டு	
பகுதி -1	தமிழ்-1
பகுதி-2	ஆங்கிலம்-1
பகுதி-3	தாள்-1 இந்திய வரலாறு (கி.பி.1206 வரை)
	தாள்-2 இந்திய வரலாறு (கி.பி.1206-1707)
	தாள்-3 இந்திய வரலாறு (கி.பி.1707-1947)

இரண்டாமாண்டு	
பகுதி - 1	தமிழ்-2
பகுதி-2	ஆங்கிலம்-2
பகுதி-3	தாள்-4 ஐரோப்பிய வரலாறு (கி.பி.1453-1789)
	தாள்-5 ஐரோப்பிய வரலாறு (கி.பி.1789-1945)
	தாள்-6 பொதுப் பொருளாதாரம்

மூன்றாமாண்டு	
தாள்-7	தமிழக வரலாறு (சங்ககாலம் முதல் கி.பி.1565 வரை)
தாள்-8	தமிழக வரலாறு (கி.பி.1565-1947 வரை)
தாள்-9	இந்திய அரசியலமைப்பின் வரலாறு (கி.பி.1773 முதல் 1950 வரை)
தாள்-10	சுற்றுலா மேலாண்மை
தாள்-11	கணிப்பொறியும் தரவு ஆய்வும்

இளநிலைத் தமிழிசை (பி.ஏ)

முதலாமாண்டு	
பகுதி -1	தமிழ்-1
பகுதி-2	ஆங்கிலம்-1
பகுதி-3	தாள்-1 செயல்முறை-1
	தாள்-2 தமிழிசையியல்-1
	தாள்-3 தமிழிசை வரலாறு-1

இரண்டாமாண்டு	
பகுதி - 1	தமிழ்-2
பகுதி -2	ஆங்கிலம்-2
பகுதி-3	தாள்-4 செயல்முறை-2
	தாள்-5 தமிழிசையியல்-2
	தாள்-6 தமிழிசை வரலாறு-2

மூன்றாமாண்டு	
தாள்-7	செயல்முறை-3
தாள்-8	செயல்முறை-4
தாள்-9	தமிழிசையியல்-3
தாள்-10	தமிழிசை வரலாறு-3
தாள்-11	துணைப்பாடம் (செய்முறை)

இளநிலைத் தமிழ் இலக்கியம் (பி.லிட்.)

முதலாமாண்டு	
தாள் -1	இக்கால இலக்கியம்
தாள்-2	சிற்றிலக்கியம்
தாள்-3	தமிழ் இலக்கிய வரலாறு
தாள்-4	நம்பியகப் பொருள், புறப்பொருள் வெண்பாமாலை
தாள்-5	நன்னூல்-எழுத்ததிகாரம், சொல்லதிகாரம்-காண்டிகையுரை

இரண்டாமாண்டு	
தாள் -6	காப்பிய இலக்கியம்
தாள்-7	சமய இலக்கியம்
தாள்-8	யாப்பருங்கலக்காரிகை, தண்டியலங்காரம்
தாள்-9	தொல்காப்பியம்-எழுத்ததிகாரம்-இளம்பூரணம்
தாள்-10	தொல்காப்பியம்-சொல்லதிகாரம்-இளம்பூரணம்

மூன்றாமாண்டு	
தாள்-11	சங்க இலக்கியம்
தாள்-12	நீதி இலக்கியம்
தாள்-13	தமிழக வரலாறும் பண்பாடும் கல்வெட்டியலும்
தாள்-14	தொல்காப்பியம்-பொருளதிகாரம்-இளம்பூரணம்
தாள்-15	இலக்கியத் திறனாய்வும் ஒப்பிலக்கியமும்

இளநிலை வணிகவியல் (பி.காம்)

முதலாமாண்டு		
பகுதி -1	வணிகத் தமிழ்-1	
பகுதி-2	ஆங்கிலம்-1	
பகுதி-3	தாள்-1	வணிகப் பொது அறிவு
	தாள்-2	கணக்கியல்
	தாள்-3	வணிகப் புள்ளியியல்

இரண்டாமாண்டு		
பகுதி - 1	வணிகத் தமிழ்-2	
பகுதி-2	ஆங்கிலம்-2	
பகுதி-3	தாள்-4	சந்தையியல்
	தாள்-5	கூட்டாண்மைக் கணக்கியல்
	தாள்-6	வணிக மேலாண்மை

மூன்றாமாண்டு	
தாள்-7	தொழில் முனைவோர் வளர்ச்சி
தாள்-8	வணிகக் கொள்கை
தாள்-9	நிதி மேலாண்மை
தாள்-10	நிறுமக் கணக்கியல்
தாள்-11	வங்கியியல்

பி.பி.ஏ
(BBA -Bachelor of Business Administration)

முதலாமாண்டு		
பகுதி -1		தமிழ்-1
பகுதி-2		ஆங்கிலம் -1
பகுதி-3	தாள்-1	அமைப்புசார் நடத்தையியல் (Behaviour Sciences)
	தாள்-2	மேலாண்மைக் கொள்கைகள் மற்றும் வணிகக் கடிதத் தொடர்பு (Principles of Management & Business Communication)
	தாள்-3	மேலாண்மைக் கணிதவியல் மற்றும் புள்ளியியல் (Mathematics & Statistics for managers)

இரண்டாமாண்டு		
பகுதி -1		தமிழ்-2
பகுதி-2		ஆங்கிலம் -2
பகுதி-3	தாள்-1	மேலாண்மைப் பொருளியல் (Managerial Economics)
	தாள்-2	நிதி மற்றும் மேலாண்மைக் கணக்கியல் (Financial & Management Accounting)
துணைத்தாள்-3		வணிகச் சட்டம் (Business Law)

மூன்றாமாண்டு		
பகுதி-3	தாள்-1	செயல்பாட்டு மேலாண்மை (Operations Management)
	தாள்-2	சந்தை மேலாண்மை (Marketing management)
	தாள்-3	மனித வள மேலாண்மை (Human Resource Management)
துணைத்தாள் 1		தகவல் தொழில்நுட்ப மேலாண்மை (Management Information System (MIS))
துணைத்தாள் 2		நிதி மேலாண்மை (Financial Management)

தொலைநிலைக் கல்வி விண்ணப்பம்,
பாட நூல்கள் தொடர்பான விவரங்களுக்கு
தொலைபேசி 04362 - 227 152

தேர்வு தொடர்பான அனைத்து விவரங்களுக்கு
தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்
தொலைபேசி 04362 - 227 845

பி.சி.ஏ
(BCA -Bachelor of Computer Applications)

முதலாமாண்டு

பகுதி -1		தமிழ்-1
பகுதி-2		ஆங்கிலம் -1
பகுதி-3	தாள்-1	கணிப்பொறி அடிப்படைகள் மற்றும் பி.சி. மென்பொருள் (Computer Fundamentals and PC Software)
	தாள்-2	C-நிரல் அமைப்பு (Programming in C)
	தாள்-3	கணிப்பொறிக் கட்டமைப்பின் முன்னுரை (Introduction to Computer Organisation)
	தாள்-4	கணிப்பொறிவழி கணித முறைகள் (Computer Oriented Numerical Methods)
	தாள்-5	அமைப்புப் பகுப்பாய்வு மற்றும் திட்டம் (System Analysis and Design)
செய் முறை	தாள்-6	சி-வழியமைப்புச் செய்முறை (Programming in C-Lab)

இரண்டாமாண்டு

பகுதி -1		தமிழ்-2
பகுதி-2		ஆங்கிலம் -2
பகுதி-3	தாள்-7	கணக்கு மற்றும் நிதியியல் மேலாண்மை (Accounting and Financial Management)
	தாள்-8	தரவு தள மேலாண்மை முறைகள் (Data Base Management Systems)
	தாள்-9	சி ++ பொருள் வகை வழியமைப்பு (Object Oriented programming in C++)
	தாள்-10	கணிப்பொறி வரைகலையியல் (Computer Graphics)
	தாள்-11	கணிப்பொறி வலையமைப்பு (Computer Networks)
செய்முறை		
	தாள்-12	சி++ வழியமைப்புச் செய்முறை (Practical - Programming in C++ Lab)

மூன்றாமாண்டு

	தாள் 13	மென்பொருள் பொறியியல் (Software Engineering)
	தாள்-14	மேலாண்மைக் கொள்கைகள் மற்றும் தொழில்நுட்பங்கள் (Management Principles and Techniques)
	தாள்-15	பல்லூடக அமைப்பு முறைகள் (Multimedia Systems)
	தாள்-16	இயக்க ஒருங்கு (Operating Systems)
	தாள்-17	சன்னல் வழியமைப்பு (Windows programming)
செய்முறை		
	தாள்-18	சன்னல் வழியமைப்புச் செய்முறை (Windows programming Lab)
	தாள்-19	வரைகலையியல் மற்றும் பல்லூடகச் செய்முறைகள் (Graphics and Multimedia lab)
	தாள்-20	செய்முறைத் திட்டம் (Project)

இளநிலைப் புவியியல் (பி.எஸ்சி)

முதலாமாண்டு

பகுதி -1		தமிழ்-1
பகுதி-2		ஆங்கிலம்-1
பகுதி-3	தாள்-1	கடலியல்
	தாள்-2	கால நிலையியல்
	தாள்-3	செய்முறை -1

இரண்டாமாண்டு

பகுதி - 1		தமிழ்-2
தாள் -2		ஆங்கிலம்-2
பகுதி-3	தாள்-4	புவியமைப்பியல்
	தாள்-5	வரைபட அறிவியல்
	தாள்-6	செய்முறை -2

மூன்றாமாண்டு

தாள்-7	தொழிற் புவியியல்
தாள்-8	இந்தியாவின் புவியியல்
தாள்-9	தொலையுணர்வுப் புவியியல்
தாள்-10	செய்முறை -3
தாள்-11	செய்முறை -4

முதுநிலைத் தமிழ் (எம்.ஏ)

முதலாமாண்டு	
தாள் -1	தமிழிலக்கிய வரலாறு
தாள்-2	தொல்காப்பியம்-எழுத்ததிகாரம்
தாள்-3	இக்கால இலக்கியம்
தாள்-4	சிற்றிலக்கியம்
தாள்-5	சமய இலக்கியம்

இரண்டாமாண்டு	
தாள் -6	தொல்காப்பியம்-சொல்லதிகாரம்
தாள்-7	தொல்காப்பியம்-பொருளதிகாரம்
தாள்-8	காப்பிய இலக்கியம்
தாள்-9	சங்க இலக்கியம்
தாள்-10	திறனாய்வும் ஒப்பிலக்கியமும்

முதுநிலை வரலாறு (எம்.ஏ)

முதலாமாண்டு	
தாள் -1	இந்திய வரலாறு (கி.பி.1206 வரை)
தாள்-2	இந்திய வரலாறு (கி.பி.1206-1707)
தாள்-3	இந்திய வரலாறு (கி.பி.1707-1947)
தாள்-4	தமிழக வரலாறு (சங்ககாலம்-கி.பி.1565 வரை)
தாள்-5	தமிழக வரலாறு (கி.பி.1565-1947 வரை)

இரண்டாமாண்டு	
தாள் -6	சீன மற்றும் ஜப்பான் வரலாறு (கி.பி.1800-1975)
தாள்-7	அமெரிக்கா வரலாறு (கி.பி.1776-1945)
தாள்-8	ஐரோப்பிய வரலாறு (கி.பி.1453-1989)
தாள்-9	ஐரோப்பிய வரலாறு (கி.பி.1789-1945)
தாள்-10	பன்னாட்டு உறவுகள் (கி.பி.1945 முதல்)

முதுநிலை யோகாவும் மனித மாண்பும் (எம்.ஏ)

முதலாமாண்டு	
தாள்-1	யோகா தோற்றமும் வளர்ச்சியும்
தாள்-2	தற்கால யோகாவின் பயன்பாட்டு முறைகள்
தாள்-3	உடல் நலம்
தாள்-4	உயிர் வளமும் மனவளமும்
தாள்-5	யோகப் பயிற்சிகள்

இரண்டாமாண்டு	
தாள் -6	மனித மாண்பும் சமுதாய நலனும்
தாள்-7	தன்னை அறிதலும் முழுமைப்பேறும்
தாள்-8	சமூக அறங்கள்
தாள்-9	உலகச் சமாதானம் -1
தாள்-10	யோகப் பயிற்சிகள் -2

முதுநிலைத் தமிழிசை (எம்.ஏ)

முதலாமாண்டு	
தாள் -1	செய்முறை-1 கல்பிதம்-1
தாள்-2	செய்முறை-2 மனோதர்மம்
தாள்-3	இசையியல்-1
தாள்-4	இசை வரலாறு
தாள்-5	இசை நாடகம் (இராம நாடகக் கீர்த்தனை)

இரண்டாமாண்டு	
தாள் -6	செய்முறை-3 கல்பிதம்-2
தாள்-7	செய்முறை-4 செவ்விசை அரங்கு நிகழ்த்துதல்
தாள்-8	இசையியல்-2
தாள்-9	இசை வரலாறு-2
தாள்-10	ஆய்வேடு

முதுநிலை வணிகவியல் (எம்.காம்)

முதலாமாண்டு	
தாள் -1	வணிக மேலாண்மை
தாள்-2	அங்காடியியல் மேலாண்மை
தாள்-3	மேலாண்மைக் கணக்கியல்
தாள்-4	நிறுமச்சட்டம்
தாள்-5	இந்தியா மற்றும் வெளிநாடுகளில் கூட்டுறவு

இரண்டாமாண்டு	
தாள் -6	மனித வள மேலாண்மை
தாள்-7	நிதி மேலாண்மை
தாள்-8	மேல்நிலைக் கணக்கியல்
தாள்-9	பன்னாட்டு வாணிபம்
தாள்-10	ஆய்வு முறைகள்

நேரடிச் சேர்க்கை

தொலைநிலைக் கல்விக் இயக்ககத்தில் மாணவர்கள் ஆண்டு முழுவதும் (நாட்காட்டி ஆண்டு/கல்வியாண்டு) சேர்க்கை பெறலாம். பல்கலைக்கழக வேலை நாள்களில் காலை 10.00 மணி முதல் மாலை 05.00 மணி வரை (உணவு இடைவேளை நீங்கலாக) உரிய கட்டணத்தைத் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில் நேரில் செலுத்தி விண்ணப்பத் துடன் கூடிய விவரக் கையேட்டைப் பெற்றுக் கொள்ளலாம்.

எம்.பி.ஏ
(MBA - Master of Business Administration)

1. எம்.பி.ஏ பொது (General)
2. எம்.பி.ஏ நிதி மேலாண்மை (Financial Management)
3. எம்.பி.ஏ மனிதவள மேலாண்மை (Human Resource Management)
4. எம்.பி.ஏ சந்தை மேலாண்மை (Marketing Management)
5. எம்.பி.ஏ அமைப்பு மேலாண்மை (System Management)
6. எம்.பி.ஏ வேளாண் வணிக மேலாண்மை (Agri.Business Management)

காலம் : 2 ஆண்டுகள் (பருவமுறை)
கல்வித்தகுதி: ஏதேனும் ஒரு இளநிலைப் பட்டம்

* அனைத்துத் தாள்களுக்கும் அக மதிப்பெண் 25 + தேர்வு மதிப்பெண் 75; மொத்தம் 100 மதிப்பெண்கள்.
  அக மதிப்பெண்கள்:
  ஒப்படைப்பு (assignment) -2 : 15 மதிப்பெண் (ஒவ்வொன்றிற்கும் 7 1/2 மதிப்பெண்)
  தேர்வு (exam) -1 : 10 மதிப்பெண்
  கூடுதல் : 25 மதிப்பெண்

* **எம்.பி.ஏ -பொது**: இப்பிரிவினைத் தேர்வு செய்யும் மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ள விருப்பப் பாடங்களிலிருந்தும் (electives) ஏதேனும் மூன்று விருப்பப்பாடத் தாள்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

* **எம்.பி.ஏ-நிதி மேலாண்மை, மனிதவள மேலாண்மை, சந்தை மேலாண்மை, அமைப்பு மேலாண்மை மற்றும் வேளாண் வணிக மேலாண்மை** ஆகியவற்றில் ஏதேனும் ஒரு சிறப்புப் பிரிவினைத் தேர்வு செய்யும் மாணவர்கள் தொடர்புடைய விருப்பப்பாடங்களில் (electives) கொடுக்கப்பட்டுள்ள தாள்களில் மட்டும் ஏதேனும் மூன்று விருப்பப்பாடத் தாள்களைத் தெரிவு செய்தல் வேண்டும்.

* விருப்பப்பாடம்-4 இல் மாணவர்கள் ஆய்வேடு அல்லது தொடர்புடையப் பாடப்பிரிவில் ஒரு விருப்பப்பாடத் தாளினைத் தெரிவு செய்ய வேண்டும்.

முதற் பருவம்

தாள்-1	மேலாண்மைக் கோட்பாடுகள் (Principles of Management)
தாள்-2	அமைப்புசார் நடத்தையியல் (Behavioural Sciences)
தாள்-3	மேலாண்மைப் பொருளியல் I (Economics for Manager I)
தாள்-4	மேலாண்மை அறிவியல் (Management Science)
தாள்-5	வணிகக் கடிதத் தொடர்பு (Business Communication)

இரண்டாம் பருவம்

தாள்-6	நிதி மற்றும் மேலாண்மைக் கணக்கியல் (Financial and Management Accounting)
தாள்-7	ஆய்வியல் அணுகுமுறைகள் (Research Methodology)
தாள்-8	வணிகச் சட்டம் (Business Law)
தாள்-9	நிறுவனத் தகவல் முறைகள் (Enterprisewide Information Systems)
தாள்-10	மேலாண்மைப் பொருளியல் II (Economics for Managers II)

மூன்றாம் பருவம்

தாள்-1	நிதி மேலாண்மை (Financial Management)
தாள்-2	செயல்முறை மேலாண்மை (Operations Management)
தாள்-3	மனித வள மேலாண்மை (Human Resource Management)
தாள்-4	சந்தை மேலாண்மை (Marketing Management)
தாள்-5	அமைப்பு பகுப்பாய்வு மற்றும் திட்டம் (System Analysis & Design)

நான்காம் பருவம்

தாள்-1	யுக்தி மேலாண்மை (Strategic Management)
தாள்-2	விருப்பப் பாடம் -1 (Elective I)
தாள்-3	விருப்பப் பாடம் -2 (Elective II)
தாள்-4	விருப்பப் பாடம் -3 (Elective III)
தாள்-5	விருப்பப் பாடம் -4 (Elective IV) அல்லது திட்டக்கட்டுரை (Project)

விருப்பப்பாடம்

1. சந்தை மேலாண்மை (Marketing Management)
2. நிதி மேலாண்மை (Financial Management)
3. அமைப்பு மேலாண்மை (System Management)
4. மனித வள மேலாண்மை (Human Resource Management)
5. வேளாண்-வணிக மேலாண்மை (Agro Business Management)

I. சந்தை மேலாண்மை
(MARKETING MANAGEMENT)

1. சந்தை ஆய்வு (Marketing Research)
2. நுகர்வோர் நடத்தையியல் (Consumer behaviour)
3. விளம்பர மற்றும் விற்பனை மேலாண்மை (Advertising & Sales Management)
4. உற்பத்தி மேலாண்மை (Production Management)
5. சில்லறை விற்பனை மேலாண்மை (Retail Management)
6. ஊரகச் சந்தையியல் (Rural Marketing)
7. வணிகக்குறியீடு மேலாண்மை (Brand Management)
8. விற்பனை மற்றும் வழங்கல் மேலாண்மை (Distribution Management)

II. நிதி மேலாண்மை
(FINANCIAL MANAGEMENT)

1. முதலீடு மற்றும் செயல்பாட்டு மேலாண்மை (Investment & Portfolio Management)
2. நிறுவன நிதியியல் (Corporate Finance)
3. நிதி நிறுவனங்கள் மற்றும் செயல்பாடுகள் (Financial Institutions & Services)
4. முதலீட்டு வங்கியியல் (Investment Banking)
5. தீர்வு மேலாண்மை (Derivative Management)
6. திட்ட மதிப்பிடல் (Project appraisal)

III. அமைப்புசார் மேலாண்மை
(SYSTEM MANAGEMENT)

1. அறிவுசார் மேலாண்மை (Knowledge Management)
2. முடிவுகள் ஆதரவு மேலாண்மை (Decision Support Management)
3. மின்-வணிக மற்றும் எண் வணிகமேலாண்மை (e-Business & Digital Economy)
4. மாதிரிகள் மற்றும் புகுத்துதல் (Modelling & simulation)
5. மென்பொருள் திட்ட மேலாண்மை (Software project Management)
6. இணையதள தொழில்நுட்பம் & கட்டமைப்பியல் (Internet Technologies & systems)

IV. மனித வள மேலாண்மை
(HUMAN RESOURCE MANAGEMENT)

1. பணியாளர் பயிற்சி & மேம்பாடு (Training & Development)
2. பணித்திறன் மதிப்பிடல் (Performance Appraisal)
3. அமைப்பு மேம்பாடு (Organisational Development)
4. வழிகாட்டல் & ஆலோசனை (Guidance and Counselling)
5. பணியாளர் நலச் சட்டங்கள் (Labour Legislation)
6. இழப்பீட்டு மேலாண்மை (Compensation Management)
7. தொழில்முனைவோர் மேம்பாடு (Entrepreneurship Development)

V. வேளாண்-வணிக மேலாண்மை
(AGRI. BUSINESS MANAGEMENT)

1. இயற்கை வள மேலாண்மை (Natural Resource Management)
2. வேளாண் வணிகத் திட்ட மேலாண்மை (Agri.Business Project Management)
3. வேளாண் இடர் மேலாண்மை (Agricultural Risk Management)
4. பன்னாட்டு வேளாண் பொருள் வணிகம் (International Trade in Agricultural Products)
5. வேளாண் இடுபொருள் சந்தையியல் (Agricultural Input Marketing)
6. உணவுப் பொருள் சில்லறை விற்பனை மேலாண்மை (Food Retailing)

முதுநிலை- புவியியல் (எம்.எஸ்சி)

முதலாமாண்டு

தாள் -1	புவி அமைப்பியல்
தாள்-2	மக்கட்தொகைப் புவியியல்
தாள்-3	உலகப் புவியியல்
தாள்-4	செய்முறை-1
தாள்-5	செய்முறை-2

இரண்டாமாண்டு

தாள் -6	பயன்பாட்டுக் காலநிலையியல்
தாள்-7	தொழில் மற்றும் நகரப் புவியியல்
தாள்-8	தொலையுணர்வுப் புவியியல் & புவியியல் தகவல் தொகுப்பு
தாள்-9	பேரிடர் மேலாண்மை
தாள்-10	செய்முறை-3 (தாள்-8 தொடர்பாக)

பி.ஜி.டி.சி.ஏ (கணிப்பொறிப் பயன்பாட்டியலில் முதுநிலைப் பட்டயம்)

PGDCA -Post Graduate Diploma in Computer Applications

முதல் பருவம்	
தாள்-1	தகவல்தொழில்நுட்ப அறிமுகம் (Introduction to Information Technology)
தாள்-2	கணிப்பொறி எண்ணிலக்க கட்டமைப்பு (Digital Computer Organisation)
தாள்-3	சி மற்றும் சி++ வழியமைப்பு (Programming in Cand C^{++})
தாள்-4	தொடர்புடைய தரவுதள மேலாண்மை அமைப்பு (Relational Data Base Management Systems)
தாள்-5	செய்முறை-1 பிசி மென்பொருள் (Practical-I PC Software lab)
தாள்-6	செய்முறை-2 சி மற்றும் சி++ வழியமைப்புச் செய்முறை (Practical-II Programming in C and C++ Lab)

இரண்டாம் பருவம்	
தாள்-7	கணிப்பொறி வலையமைப்பு (Computer Networks)
தாள்-8	ஜாவா வழியமைப்பு (Java Programming)
தாள்-9	இணையதளமும் தள வடிவமைப்பும் (Internet and Web Designing)
தாள்-10	மென்பொருள் பொறியியல் (Software Engineering)
தாள்-11	செய்முறை-3 ஜாவா மற்றும் இணைய வடிவமைப்பு - செய்முறை (Practical-III JAVA & Web Designing-Lab)
தாள்-12	செய்முறை-4 திட்டச் செய்முறை (Practical-IV Project work)

பட்டயப் (Diploma) பாடப்பிரிவுகள்

இசை ஆசிரியர் பயிற்சி

தாள் -1	இசைக் கல்வியியல்
தாள்-2	கல்வி உளவியலும் பள்ளி ஆட்சிமுறையும்
தாள்-3	செயல்முறையும் இசைப் பயிற்சிக் கருவிகளும்
தாள்-4	செய்முறை

யோகா ஆசிரியர் பயிற்சி

தாள் -1	யோகா - வரலாறும் வளர்ச்சியும்
தாள்-2	கல்வி உளவியலும் பள்ளி ஆட்சிமுறையும்
தாள்-3	வேதாத்ரியச் சிந்தனைகள் மற்றும் அகத்தாய்வு
தாள்-4	செய்முறைப் பயிற்சி / திட்ட ஆய்வேடு

பரதநாட்டியம் ஆசிரியர் பயிற்சி

தாள் -1	நாட்டியக் கல்வியியல்
தாள்-2	கல்வி உளவியலும் பள்ளி ஆட்சிமுறையும்
தாள்-3	நட்டுவாங்கம் -செய்முறை
தாள்-4	நாட்டியம் பயிற்றுவித்தல்-செய்முறை

பரதநாட்டியம்

தாள் -1	செய்முறை-1
தாள்-2	செய்முறை-2
தாள்-3	பரதநாட்டிய இலக்கணம்
தாள்-4	பரதநாட்டிய வரலாறு

மூலிகை அறிவியல்

தாள் -1	இந்திய மருத்துவ முறைகளும் வரலாறும்
தாள்-2	தாவர அமைப்பு மற்றும் பகுப்பாய்வு
தாள்-3	மருந்தறிவியல்
தாள்-4	செய்முறைப் பயிற்சி

மருத்துவ மூலிகை அழகுக் கலை

தாள் -1	அழகுக் கலை அறிமுகம்
தாள்-2	மூலிகை அழகுக் கலையும் அறிவியல் கூறுகளும்
தாள்-3	செய்முறை-1
தாள்-4	செய்முறை-2

மணியியல்

தாள்-1	மணிக்கற்கள்
தாள்-2	செயற்கை முறை மணிக்கற்கள்
தாள்-3	மணிக்கற்கள் வகைப்படுத்துதல்
தாள்-4	செய்முறை

தொழிலாளர் நலச் சட்டம்

தாள் 1.	
தாள் 2.	
தாள்-3.	பின்னர் அறிவிக்கப்படும்
தாள்-4.	

சான்றிதழ்ப் பாடப்பிரிவுகள்

தமிழ்ப் புலவர் பயிற்சி

தாள்-1	தமிழ் கற்பிக்கும் முறை
தாள்-2.	கல்வி உளவியலும் பள்ளி ஆட்சிமுறையும்
தாள் 3.	கல்வியில் தகவல்தொழில்நுட்பவியல் பயன்பாடு

இசை

தாள் -1	செய்முறை-1
தாள்-2	செய்முறை-2
தாள்-3	அடிப்படை இசை இலக்கணம்

பரதநாட்டியம்

தாள் -1	செய்முறை-1
தாள்-2	செய்முறை-2
தாள்-3	பரதநாட்டிய அடிப்படை இலக்கணம்

நூலக மற்றும் தகவலறிவியல்

தாள்-1.	நூலகவியல் கோட்பாடுகள்-1
தாள்-2.	நூலகவியல் கோட்பாடுகள்-2
தாள்-3.	நூற்பகுப்பு மற்றும் நூற்பட்டித் தயாரிப்புச் செய்முறை

நுகர்வோர் கல்வி [Consumer Education]

தாள் 1.	பாடத் திட்டக்குழுவின் பரிந்துரை பெற்றபின் அறிவிக்கப்படும்
தாள் 2.	
தாள்-3.	

மனித உரிமைக்கல்வி

தாள் 1.	
தாள் 2.	பின்னர் அறிவிக்கப்படும்
தாள்-3.	

அருங்காட்சியகவியல்

தாள் 1.	
தாள் 2.	பின்னர் அறிவிக்கப்படும்
தாள்-3.	

தாள நுட்பவியல்

தாள் 1.	
தாள் 2.	பின்னர் அறிவிக்கப்படும்
தாள்-3.	

மொழிபெயர்ப்பியல்

தாள் 1.	
தாள் 2.	பின்னர் அறிவிக்கப்படும்
தாள்-3.	

- செய்முறை இடம்பெற்றுள்ள பாடப்பிரிவுகளில் கற்போர் அனைவருக்கும் தேர்வுக்கு முன்னர் செய்முறைப் பயிற்சி வகுப்புகள் தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் (தஞ்சாவூரில்) நடத்தப்பெறும்.
- போக்குவரத்து, தங்குமிடம், உணவு ஆகியவற்றிற்கான செலவுகளைக் கற்போர்களே செய்து கொள்ள வேண்டும்.

மேற்குறித்த பாடப்பிரிவுகளை உரிய மாணவர் சேர்க்கையின்மை அல்லது நிருவாகக் காரணங்களுக்காகத் தொடர்ந்து நடத்துவதும் அல்லது நீக்குவதும் பல்கலைக் கழக உரிமையாகும்.

பொதுத் தகவல்கள்

- விண்ணப்பத்தினை நிரப்புமுன் குறிப்பேட்டில் தெரிவிக்கப்படடுள்ள விவரங்களைக் கவனமுடன் படித்திடுக.

- விண்ணப்பிக்கும் பாடத்திற்குத் தேவையான கல்வித்தகுதி தங்களுக்கு இருக்கிறதா என்பதை உறுதி செய்து கொள்ளவும். (காண்க-பக்.3)

- விண்ணப்பிக்கும் பாடம், குறியீட்டு எண், விருப்பப் பாடம், கல்வி மற்றும் தகவல் மையம் (இருப்பின்) ஆகிய விவரங்களை விண்ணப்பத்தில் தெளிவாகக் குறிப்பிடவும்.

- அண்மையில் எடுக்கப்பட்ட அஞ்சல் வில்லை அளவு புகைப்படத்தை விண்ணப்பத்தில் உரிய இடத்தில் ஒட்டி கீழ்க்காணும் யாரேனும் ஒருவரிடமிருந்து சான்றொப்பம் (attestation) பெறப்பட வேண்டும்.
  * பல்கலைக்கழகம் மற்றும் கல்லூரிகளில் பணியாற்றும் பேராசிரியர்கள், இணைப் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் மற்றும் முதல்வர்கள்.
  * அங்கீகரிக்கப்பட்ட அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் உயர்நிலைப் பள்ளிகளின் சான்றிடுவதற்குரிய தகுதி பெற்ற தலைமையாசிரியர்கள் மற்றும் ஆசிரியர்கள்.
  * சான்றிடுவதற்குரிய அரசு இதழ் பதிவு பெற்ற அலுவலர்கள் (Gazetted Officers).

- **விண்ணப்பப் படிவங்கள் யாவும் தமிழிலேயே நிரப்பப்பட வேண்டும்.**

- விண்ணப்பப் படிவத்தில் தெரிவிக்கப்பட்ட விவரங்கள் இணைக்கப்பட்ட சான்றுகளுடன் மாறுபட்டிருப்பின், அவ்விண்ணப்பப் படிவம் நிராகரிக்கப்படும். செலுத்தப் பட்ட கட்டணத் தொகையும் மீள வழங்கப்படமாட்டாது.

- அங்கீகாரம் இல்லாத பல்கலைக்கழகங்களிலிருந்து பெறப்பட்ட பட்டங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

- ஒரே நேரத்தில் தொலைநிலைக்கல்வி இயக்ககவழி இரு பாடப் பிரிவுகளுக்குச் சேர்க்கை அனுமதி வழங்க இயலாது. ஒருவர் இரு விண்ணப்பங்கள் அனுப்பியிருந்தால், அவற்றில் விருப்பமான ஒன்று ஏற்கப்பெறும். மறுக்கப்பட்ட விண்ணப்பக் கட்டணம் மீள அளிக்கப்படமாட்டாது.

- கல்லூரிகள் அல்லது பல்கலைக் கழகங்களில் முழுநேரமோ தொலைநிலை வாயிலாகவோ பட்டம் படிப்பவர்கள் இங்கு இளநிலை/முதுநிலைப் பட்டங்கள் மற்றும் பட்டயம் (Diploma)/சான்றிதழ் (Certificate) படிப்பில் சேர அனுமதிக்கப்படுவர்.

பல்கலைக்கழகத்தில் நேரடிச் சேர்க்கை (Spot Admission)

கல்வி மற்றும் தகவல் மையங்கள் அருகாமையில் இல்லாதவர்கள் நேரடியாகப் பல்கலைக்கழகத் தொலைநிலைக் கல்வி இயக்ககத்தில் விண்ணப்பங்களைப் பெற்று சேர்ந்து கொள்ளலாம். அவ்வாறு நேரடிச் சேர்க்கைக்கு விரும்புவோர் கீழ்க்காணும் ஆவணங்களைக் கொண்டு வர வேண்டும்.

- விண்ணப்பப்படிவம் மற்றும் சான்றிதழ்களின் சான்றொப்பமிடப்பட்ட (attested) நகல்கள் (கல்வித் தகுதி, வயது முதலியன)

- மூல ஆவணச் சான்றுகள் மற்றும் மாற்றுச் சான்றிதழ் (Certificates in Original, Transfer Certificate)

- விண்ணப்பப் படிவத்திற்கும், அடையாள அட்டைக்கும் தேவையான அஞ்சல் வில்லை (Stamp Size) அளவிலான புகைப்படம்-2

- மூல ஆவணச் சான்றுகள் சரிபார்க்கப்பட்ட பின்னர் சேர்க்கைக்கு அனுமதிக்கப்படுவர். நேரடிச் சேர்க்கை பெறுவோர் பல்கலைக்கழக நிதிப்பிரிவில் கட்டணத் தொகையைச் செலுத்த வேண்டும்.

கட்டணங்களுக்கான தொகையினைப் பல்கலைக் கழகத்தில், அதன் அலுவலக நாட்களில் காலை 10.00 மணி முதல் மாலை 5.00 மணி வரை நேரில் செலுத்தலாம். **செலுத்தப்பட்ட கட்டணங்களுக்கான தொகை எவ்விதக் காரணத்தை முன்னிட்டும் மீள வழங்கப்பட மாட்டாது; ஈடுகட்டவும் முடியாது.**

சரிபார்த்த பின்னர் மூல ஆவணங்கள் கற்போர்களுக்கு மீள அளிக்கப்படும். மாற்றுச் சான்றிதழ் (Transfer Certificate) 2009-10ஆம் ஆண்டில் சேர்க்கை செய்யப்பட்டது என முத்திரையிடப்பட்டு மீள அளிக்கப்படும்.

நேரடிச் சேர்க்கை இயக்குநரால் உறுதி செய்யப்படும். தகுதியில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

தவணை முறை கல்விக் கட்டணச் சலுகை:

மாணவர்கள் தங்களது மொத்தக் கல்விக் கட்டணத்தை இரு தவணைகளிலும் செலுத்தலாம். கட்டணங்களைச் செலுத்த வேண்டிய இறுதி நாள் மற்றும் ஒறுப்புக் கட்டணத்துடன் (late fee) செலுத்த வேண்டிய இறுதி நாள் ஆகியவை தனியே தெரிவிக்கப்பட்டுள்ளன (காண்க.பக்.19, 20)

கல்வி மற்றும் சேர்க்கைத் தொடர்பான கட்டணங்களைத் தவிர பிற அனைத்துக் கட்டணங்களையும் வங்கி வரைவோலையாக மட்டுமே செலுத்த வேண்டும்.

கல்வி மற்றும் தகவல் மைய வழிச் சேர்க்கை (Admission by Study Centres)

ஒவ்வொரு பாடத்திட்டத்திற்குமுரிய கட்டண விவரங்கள் தனியே தெரிவிக்கப்பட்டுள்ளன (காண்க பக்.17,18)

கல்வி மற்றும் தகவல் மையங்களின் மூலம் வரும் மாணவர்கள் மொத்தக் கல்விக் கட்டணத் தொகையில் 60 விழுக்காட்டுத் தொகையை

இந்தியன் வங்கியின் உரிய செலுத்துச் சீட்டின்வழி

தமிழ்ப் பல்கலைக்கழகக் கணக்கு எண்

778957486 இல்

செலுத்த வேண்டும். கல்வி மையப் பங்கான எஞ்சிய 40 விழுக்காட்டுத் தொகையைக் கல்வி மைய ஒருங்கிணைப்பாளரிடம் செலுத்த வேண்டும்.

கல்வி மற்றும் தகவல் மையங்கள் மூலம் அனுப்பிவைக்கப்படும் விண்ணப்பங்கள் இவ்வியக்ககத்தில் பரிசீலிக்கப்பட்டு உறுதியானவுடன் சேர்க்கை எண்ணுடன் அடையாள அட்டை அனுப்பிவைக்கப்படும். அவற்றை உரிய கல்வி மையங்கள் வழி கற்போர் பெற்றுக் கொள்ளலாம். **கல்விச் சான்றுகளின் நகல்களில் கல்வி மற்றும் தகவல் மைய ஒருங்கிணைப்பாளர்கள் சான்றொப்பம் செய்தல் கூடாது.** பரிந்துரை மட்டுமே செய்து அனுப்ப வேண்டும். சான்றொப்பங்களை முன்னர்க் குறிப்பிட்டது போல அரசு இதழ் பதிவு பெற்ற அலுவலரிடமே பெற்று அனுப்ப வேண்டும்.

கல்விக் கட்டணத்தைப் பணமாகக் கல்வி மையங்களில் செலுத்துதல் கூடாது என அறிவுறுத்தப்படுகிறது.

கற்போர், இணைப்பில் குறிப்பிட்டுள்ள கட்டணத் தொகையைத் தவிர யாதொரு கட்டணத்தையும் கல்வி மையங்களுக்குச் செலுத்த வேண்டியதில்லை.

ஒறுப்புக் கட்டணம் (Late Fee)

இளநிலை/ முதுநிலை கற்போர் இரண்டாம் மற்றும் மூன்றாம் ஆண்டு கல்விக்கட்டணத்தை **ஒவ்வொரு ஆண்டும் கால அட்டவணையில் (பக்கம் 19,20) குறிப்பிட்டுள்ள நாளுக்குள்** ஒறுப்புக் கட்டணமின்றிச் செலுத்தலாம். **ரூ.100/- ஒறுப்புக் கட்டணத்துடன்** அட்டவணையில் குறிப்பிட்டுள்ள நாளுக்குள் செலுத்தலாம்.

மாற்றுத்திறனோருக்கானக் கட்டணச் சலுகை (Fee Concession)

மருத்துவச் சான்றிதழின் அடிப்படையில், பார்வையற்ற மற்றும் மாற்றுத்திறன் படைத்த மாணவர்களுக்குக் கல்விக் கட்டணம் மற்றும் தேர்வுக் கட்டணம் ஆகியவற்றைச் செலுத்துவதிலிருந்து விலக்கு அளிக்கப்படுகிறது. ஆனால், மற்றக் கட்டணங்களான சேர்க்கைக் கட்டணம், பதிவுக் கட்டணம், தகுதிக் கட்டணம், சிறப்புக் கட்டணம், அஞ்சல் செலவுக் கட்டணம், மதிப்பெண் சான்றிதழ் கட்டணம் யாவற்றையும் செலுத்துதல் வேண்டும்.

சேர்க்கை எண் (Enrollent Number)

ஒவ்வொரு பாடப் பிரிவில் சேரும் மாணவருக்கும் சேர்க்கை எண் ஒன்று அளிக்கப்பெறும். மாணவர்கள் இவ்வியக்ககத்திற்குக் கடிதம் வழி தொடர்பு கொள்ளும்போது இவ்வெண்ணைக் கட்டாயமாகக் குறிப்பிட வேண்டும்.

ஒவ்வொரு மாணவருக்கும் அந்தந்தப் பாடப் பிரிவிற்குரிய சேர்க்கைக்கு அனுமதி அளித்த பின்னர், அவர்களின் புகைப்படத்துடன் கூடிய அடையாள அட்டை இயக்குநர் (பொ) அவர்களின் கையொப்பம் மற்றும் தொலைநிலைக் கல்வி இயக்கக முத்திரையுடன் அளிக்கப்பெறும். இவ்வடையாள அட்டை குறிப்பிட்ட படிப்புக் காலம் வரை தகுதியுடையதாகும். அடையாள அட்டையைத் தேர்வுக் காலங்களிலும், கல்வி மையங்களில் நடைபெறும் பயிற்சி வகுப்புகளிலும் கேட்கும்பொழுது காண்பிக்க வேண்டும்.

அடையாள அட்டையைத் தொலைத்தவர்கள், மாற்று அடையாள அட்டையைப் பெற (Duplicate Identity Card) எழுத்துவழிக் கடிதத்துடன் ஓர் அஞ்சல் வில்லை அளவிலான புகைப்படத்தையும், ரூ.100/-க்கான வரைவோலையையும் இணைத்து இயக்ககத்தில் அளிக்கலாம். பரிசீலனைக்குப்பின் மாற்று அடையாள அட்டை வழங்கப்பெறும்.

பாடங்கள் அனுப்புதல் (Despatch of Lessons)

பாடப்புத்தகங்கள் யாவும் சேர்க்கைக்குப் பின் ஓரிரு மாதங்களில் (அஞ்சல் அல்லது கூரியரில்) அனுப்பி வைக்கப்படும்.

மையங்களின்வழி சேர்க்கைப் பெற்ற மாணவர்கள் அந்தந்த மையங்களிலேயே பாட நூல்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இரண்டாம் ஆண்டு மற்றும் மூன்றாம் ஆண்டுக்கான பாடப் புத்தகங்கள் அந்தந்த ஆண்டின் முதல் தவணைக் கல்விக் கட்டணம் செலுத்தப்பட்டதை உறுதி செய்தபின் அஞ்சலில் அனுப்பி வைக்கப்பெறும்.

தொடர்பு வகுப்புகள் (Personal Contact Programmes)

அனைத்துப் பாடப் பிரிவுகளின் தொடர்பு வகுப்புகளும் சனி, ஞாயிறு மற்றும் அரசு பொது விடுமுறை நாட்களில் கற்போர்களின் சேர்க்கையைப் பொறுத்து **பல்கலைக்கழகம் தெரிவிக்கும்சில குறிப்பிட்ட மையங்களில் நடத்தப்படும்.**

பாடப்பிரிவுகளுக்குத் தொடர்பு வகுப்புகள் கட்டாயமானவை. அவைகளுக்கு மாணவர் தம் வருகைப் பதிவுக் கணக்கில் கொள்ளப்படும். தொடர்பு வகுப்புகள் யாவும் குறிப்பிட்டுள்ள மையங்களில் மாணவர்களின்

சேர்க்கை குறைவாக இருப்பின், அருகிலுள்ள மையங்களுடன் சேர்த்து தொடர்பு வகுப்புகள் நடத்தப்படும்.

தொடர்பு வகுப்புகள் நடத்தப்படும் நாள், நேரம், இடம் ஆகிய யாவும் சேர்க்கை உறுதியான பின்னர் ஓரிரு மாதத்திற்குள் தெரிவிக்கப்படும்.

கட்டாயத் தொடர்பு வகுப்புப் பாடப்பிரிவினருக்குப் பயிற்சி வகுப்பின் இறுதி நாளில் வருகைச் சான்றிதழ் (Attendance Certificate) வழங்கப்படும். இச் சான்றிதழின் நகல்களைப் பல்கலைக்கழகத் தேர்வுக்கு விண்ணப்பிக்கும் போது இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு அனுப்பாதவர்கள் தேர்வு எழுத அனுமதிக்கப்படமாட்டார்கள்.

வருகைச் சான்றிதழைத் தொலைத்தவர்கள் ரூ.100/- செலுத்தி மாற்று வருகைச் சான்றிதழ் (Duplicate Attendance Certificate) பெற்றுக் கொள்ளலாம்.

நிர்வாகக் காரணம் அல்லது எதிர்பாரா நிகழ்வுகளின்போது தொலைநிலைத் தொடர்பு வகுப்புகளை இயக்ககம் பணி நாளிலேயே நடத்த வேண்டிய தேவை ஏற்படின் அந்நாட்களிலும் வகுப்புகள் நடைபெறும்.

பயிற்சி வகுப்புகள் (Training Programmes)

தொடர்பு வகுப்புகள் முடிந்தபின்னர் ஒருசில அறிவியல் மற்றும் கல்வியியல் பாடங்களுக்குப் பயிற்சி வகுப்புகள் கட்டாயமாக நடத்தப்பட வேண்டியுள்ளன. பயிற்சி வகுப்பு விதிதங்கள் தனியே தொடக்கத்திலேயே தெரிவிக்கப்பெறும்.

பயிற்சி வகுப்புகளின் இடங்களை மாற்றிக் கொள்ள வேண்டுமெனில், ரூ.300/-க்கான வரைவோலையை எடுத்து எழுத்து வழி கடிதத்துடன் இயக்ககத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். இயக்ககத்தின் அனுமதி இல்லாமல் பயிற்சி வகுப்புக்கான இடங்களை மாற்றிக் கொள்ள இயலாது.

முகவரி மாற்றம் (Change of Address)

விண்ணப்பத்தில் உள்ள முகவரிக்கே எல்லாக் கடிதங்களும், புத்தகங்களும் அனுப்பிவைக்கப் பெறும். முகவரி மாற்றப்படின், உரிய விவரக் கடிதத்தை ரூ.100/-க்கான வங்கி வரைவோலையுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கையொப்பமிட்டு அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு தெரிவிக்காத நிலையில் பழைய முகவரிக்கே தொடர்புகள் மேற்கொள்ளப்பெறும். முகவரி மாற்றப்படின் உரிய விவரத்தை அருகிலுள்ள அஞ்சல் நிலையத்திலும் உடன் தெரிவிக்குமாறு கற்போர் அறிவுறுத்தப்படுகின்றனர்.

பெயர் மாற்றம் (Change of Name)

விண்ணப்பத்தில் உள்ள பெயரை மாற்ற (Change of Name) வேண்டுமெனில் உரிய அரசு பதிவிதழ் சான்று (Government Gazette) பெற்றிருக்க வேண்டும். மேலும், படிப்புக் காலம் முடிந்த பின் பெயரை மாற்ற விரும்பினால், ஏற்கனவே, தேர்ச்சி பெற்ற பல்கலைக்கழகம்/பள்ளி/கல்லூரி ஆவணங்களில் பெயரை மாற்றிய விவரங்களுடன் இவ்வியக்ககத்திற்கு அனுப்பி வைத்தால் பரிசீலனை செய்யப்படும். இவ்விரண்டிற்கும் எழுத்துவழி மற்றும் ஆவணங்களுடன் ரூ.300/-க்கான வங்கி வரைவோலையை எடுத்து விண்ணப்பிக்க வேண்டும்.

பாட மாற்றம் (Change of Programme/Subjects)

ஒரு பாடப் பிரிவில் இருந்து மற்றொரு பாடப் பிரிவில் சேர்வதற்கு, சேர்க்கை உறுதிக்கான காலக் கெடுவான 30 நாட்களுக்குள் ரூ.500/- க்கான வங்கி வரைவோலையுடன் விண்ணப்பிக்க வேண்டும் அல்லது முதல் தொடர்பு வகுப்பில் கலந்து கொள்ளுவதற்கு முன்னர் (before attending the first PCP) விண்ணப்பிக்கலாம். காலந்தாழ்த்தி வரும் வேண்டுகோளைக் கருத இயலாது. செலுத்திய தொகையும் மீள வழங்கப்பட மாட்டாது

படிப்புச் சான்றிதழ் (Course Certificate)

ஒரு பாடப் பிரிவில் முழுமையான காலம் முடிந்த நிலையில்/பாதியில் விடுபட்ட நிலையில் சான்றிதழ் வேண்டுவோருக்குப் பாடப்பிரிவின் அனைத்துக் கட்டணங்களும் செலுத்தப்பெற்ற நிலுவையில்லாத நிலையில் மட்டுமே படிப்புச் சான்றிதழ் வழங்கப்படும். படிப்புச் சான்றிதழ் தொலைந்துவிட்ட நிலையில் வேறொரு சான்றிதழைப் (Duplicate Course Certificate) பெறுவதற்கு ரூ.300/-க்கான வரைவோலையை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். பல்கலைக்கழகம் அவ்வப்பொழுது கடைப்பிடிக்கும் நடைமுறைகளைப் பின்பற்றி அவ்விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு வேறொரு சான்றிதழ் வழங்கப்படும்.

தாழ்த்தப்பட்டோருக்கான உதவித் தொகை (Scholarship for SC/ST students)

ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடி இனத்தவர் வேலையில்லாதவர்களாகவோ, வருடத்திற்கு ரூ.1,00,000/-க்கு மிகாமல் வருமானம் பெறுபவர்களாகவோ இருப்பின் அரசு ஆணைப்படி, உரிய உதவித்தொகைகள் பெற்று அளிக்கப்பெறும். மாணவர்களே உரிய துறையிடமிருந்து விண்ணப்பங்களைப் பெற்று அதனை முழுமித்து இயக்கக அலுவலகத்திற்கு அனுப்பி வைக்க வேண்டும்.

